# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு
# 2017 - 2018
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 09

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழ்மீது கொண்ட பற்றினால் தனது பெயரை மாற்றிக் கொண்டவர்

அ) காளமேகம் ☐ ஆ) தனிநாயகம் அடிகள் ☐

இ) உருத்திரமூர்த்தி ☐ ஈ ) விபுலாநந்த அடிகள் ☐

2. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) தெலுங்கு ☐ ஆ) சிங்களம் ☐

இ) பாளி ☐ ஈ ) தமிழ் ☐

3. பகுசொல்லிற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நீர் ☐ ஆ) மரம் ☐

இ) தமிழர் ☐ ஈ ) இரு ☐

4. ஆட்டத்து மங்கையர் போல் மொய்த்து நின்ற பயிர்

அ) குரக்கன் ☐ ஆ) வரகு ☐

இ) நெல் ☐ ஈ ) கரும்பு ☐

5. புத்தரின் இலங்கை வருகைக்கு முன்னரே வடபகுதி__________என அழைக்கப்பட்டது.

அ) வன்னி ☐ ஆ) கல்யாணி ☐

இ) கொழும்பு ☐ ஈ ) நாகதீபம் ☐

6. நடந்தனர் என்பதன் விகுதி

அ) நட ☐ ஆ) அர் ☐

இ) னர் ☐ ஈ) ர் ☐

7. புதியதொரு வீடு நாடகத்தில் கூறப்பட்ட தொழில்

அ) கடற்றொழில் ☐ ஆ) ஏர்த்தொழில் ☐

இ) கைத்தொழில் ☐ ஈ) உழவுத்தொழில் ☐

8. இலங்கைத்தீவு தங்களுக்கு மட்டுமே உரியது எனக் கூச்சல் போடுபவர்கள்

அ) ஆங்கிலேயர் ☐ ஆ) தமிழர் ☐

இ) சிங்களவர் ☐ ஈ) ஒல்லாந்தர் ☐

9. கல் + கோவில் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) கல்க்கோவில் ☐ ஆ) கல்கோவில் ☐

இ) கற்க்கோவில் ☐ ஈ) கற்கோவில் ☐

10. செயலைக் குறிப்பது

அ) பெயர்ச்சொல் ☐ ஆ) இடைச்சொல் ☐

இ) வினைச்சொல் ☐ ஈ) உரிச்சொல் ☐

11. பௌத்தர் அல்லாதவனை மாந்தனாக மதிக்கக் கூடாது எனக் கூறும் நூல்

அ) மணிமேகலை ☐ ஆ) மகாவம்சம் ☐

இ) குண்டலகேசி ☐ ஈ) சூளவம்சம் ☐

12. இயல்புப்புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தமிழ்மொழி ☐ ஆ) கடற்கரை ☐

இ) மாம்பழம் ☐ ஈ) முட்பற்றை ☐

13. "பால் கொண்டு மடுப்பவும் உண்ணான்" இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ) அகநானூறு ☐ ஆ) புறநானூறு ☐

இ) குறுந்தொகை ☐ ஈ) தொல்காப்பியம் ☐

14. பொம்பரிப்பு என்ற இடம் அமைந்துள்ள மாவட்டம்

அ) கொழும்பு ☐ ஆ) புத்தளம் ☐

இ) அநுராதபுரம் ☐ ஈ) திருகோணமலை ☐

15. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) சிறியசிறிய ☐ ஆ) சுடச்சுட ☐

இ) பளபள ☐ ஈ) ஓடஓட ☐

16. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆண்டு

அ) 1964 ☐ ஆ) 1967 ☐

இ) 1984 ☐ ஈ) 1974 ☐

17. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிப் போனதன் பின் தமிழகத்தில் குரங்குகளும் கழுகுகளும் வாழ்ந்ததாகப் பொய்யுரைப்பது

அ) மகாவம்சம் ☐ ஆ) இராமாயணம் ☐

இ) பாரதம் ☐ ஈ) மணிமேகலை ☐

18. இலக்கண வகையால் தமிழ் மொழியிலுள்ள சொற்கள்

அ) நான்கு ☐ ஆ) ஆறு ☐

இ) இரண்டு ☐ ஈ ) மூன்று ☐

19. விடிவெள்ளி தோன்றுவது

அ) வடக்கில் ☐ ஆ) மேற்கில் ☐

இ) கிழக்கில் ☐ ஈ ) தெற்கில் ☐

20. தமிழ்மன்னன் இராவணனால் ஆளப்பட்ட இலங்கை நகரைச் சிங்கள அரசு சிறீலங்கா என்று மாற்றிய நூற்றாண்டு

அ) 19 ☐ ஆ) 21 ☐

இ) 17 ☐ ஈ ) 20 ☐

21. யாழ்நூலகம் தமிழர்களின் கல்வி, பண்பாட்டுக் கருவூலமாக விளங்கியது. இச்சொல்லியத்தில் இடம்பெற்ற வினைச் சொல்

அ) யாழ்நூலகம் ☐ ஆ) விளங்கியது ☐

இ) தமிழர்களின் ☐ ஈ ) பண்பாடு ☐

22. "கொடுவாளால் களிறுகளைக் கொன்று" இப்பாடல் வரியில் களிறு என்பது

அ) ஆண்யானை ☐ ஆ) ஆண்மான் ☐

இ) பெண்யானை ☐ ஈ ) பெண்மான் ☐

23. பண்டைய தமிழரசுகள் வெளிநாடுகளுடன் வணிகம் செய்தன என்பதற்குச் சான்றாக அமைவன

அ) வெளிநாட்டு நாணயங்கள் ☐ ஆ) ஈமத்தாழிகள் ☐

இ) கோவில்கள் ☐ ஈ ) ஈமப்பொருட்கள் ☐

24. புத்தாண்டு என்பதைப் பிரித்தால்

அ) புது + ஆண்டு ☐ ஆ) புதிய +ஆண்டு ☐

இ) புத் + தாண்டு ☐ ஈ ) புதுமை + ஆண்டு ☐

25. தனிநாயகம் அடிகளாரால் ஓராண்டில் இருநூறு விரிவுரைகள் ஆற்றப்பட்ட இடம்

அ) இலண்டன் ☐ ஆ) இலங்கை ☐

இ) இந்தியா ☐ ஈ ) அமெரிக்கா ☐

26. சீன, மலாய் மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்ட நூல்

அ) மணிமேகலை ☐ ஆ) நாலடியார் ☐

இ) திருக்குறள் ☐ ஈ ) சிலப்பதிகாரம் ☐

27. இன்றைய உலகிற்குச் சூழல் பாதுகாப்பு சாலப் பொருந்தும். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்

அ) பொருந்தும் ☐ ஆ) சால ☐

இ) பாதுகாப்பு ☐ ஈ ) சூழல் ☐

28. பாறைபிளந்து பயன் விளைவிப்பவன்

அ) குயவன் ☐ ஆ) கொல்லன் ☐

இ) உழவன் ☐ ஈ ) மீனவன் ☐

29. மதிபோலும் முகம் என்ற உவமையணியில் இடம்பெற்றுள்ள உவமேயம்

அ) மதி ☐ ஆ) போலும் ☐

இ) முகம் ☐ ஈ ) அழகு ☐

30. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கப் புலவர்

அ) வெர்சில் ☐ ஆ) சாவோ ☐

இ) சேக்ச்பியர் ☐ ஈ ) கோமர் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இன்றைய கணினி உலகில் பெரும்பாலான இளையோர் இணையத்திலே தங்களை முடக்கி உள்ளனர். அவர்கள் இணையத்தில் விளையாடுவதிலும் உரையாடுவதிலும் பெருமளவு நேரத்தினைக் கழிக்கின்றனர். இதனால் இன்றைய இளையோர் உடற்பயிற்சியோ வெளிக்கள விளையாட்டுகளோ இன்றி ஒரே இடத்தில் அமர்ந்திருக்கின்றனர். இணையத்தின் மூலமே இளையோர் தங்கள் தேவையையும் பொழுதுபோக்கையும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். இணையத்தின் பயன்பாடு, சிந்திக்கும் திறனைத் தடுக்கின்றது. இளையோர்கள் மட்டுமல்ல பெரியோர்கள் கூடத் தங்கள் தேவைகளுக்கு இணையத்தையே நாடுகின்றனர். பொருட்களைக்கூட இருந்த இடத்திலேயே இணையத்தின் வழியே கொள்வனவு செய்கின்றனர். உறவுகளுக்கிடையிலான நேரடி உரையாடல்களும் பிள்ளைகள் பெற்றோருடன் பேசுவதும் மிகவும் குறைந்து வருகின்றன. "அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு" என்பதனை இளையோர் புரிந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் அறிவுத் தேடல்களுக்கு மட்டும் இணையத்தினைப் பயன்படுத்துவார்களேயானால் அவர்களது எதிர்காலம் சிறப்பாக அமையும்.

1. இணையத்தின் பயன்பாடு எதனைத் தடுக்கின்றது?

______________________________

______________________________

2. இளையோர் எவ்வாறு பெருமளவு நேரத்தினை இணையத்தில் கழிக்கின்றனர்?

____________________________________________________

____________________________________________________

3. இங்கு கூறப்பட்டுள்ள பழமொழியின் பொருள் யாது ?

____________________________________________________

____________________________________________________

4. மாணவர்கள் எதற்கு மட்டும் இணையத்தினைப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

____________________________________________________

____________________________________________________

5. இணையப் பயன்பாடு பற்றிய உமது கருத்து யாது?

____________________________________________________

____________________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தமிழர் பண்பாட்டுக் கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர் யார்?

2. "போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க". இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

3. இலங்கையில் உள்ள மிகப் பெரிய தாழிக்காடு எது? அது எப்பகுதியில் உள்ளது?

4. கவிஞர் விளை நிலத்தைப் பாறை என்று கூறுவதற்குக் கரணியம் என்ன?

5. 'மகாவம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டும்' எனக் கூறிய தத்துவ மேதை யார்?

6. வீரத்தாய் தன் மகனை எவ்வாறு போருக்கு அனுப்பி வைத்தாள்?

7. 1979 ஆம் ஆண்டு கந்தரோடையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட பல்கலைக்கழகம் எது?

புள்ளிகள் 10

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.

## கல்வி

| | | | | |
|---|---|---|---|---|
| வாழ்வில் | கற்றுவிட்டால் | இனிதாகும் | வீரனாய் | உள்ளம் |

கல்வி மாந்தரின் கண்ணாகும் - நாம்
கற்காவிட்டால் என்னாகும்
எல்லாம் ________________ மண்ணாகும் - நம்
இதயம் அதனால் புண்ணாகும்

கற்கும் போதோ கல்லாகும் - கல்வி
கற்றபின்னால் கற்கண்டாகும்
கற்கும் போதே கற்றால் - எக்
காலமும் எமக்கு ________________

இன்றே ________________ கல்வி வரும் - இளமை
ஏகிய பின்னால் கானல் வரும்
வென்றே கல்விப் போரினிலே - நீ
________________நாட்டில் உலாவருவாய்

காசினால் உள்ளம் மாசடையும் - நல்ல
கல்வியால்________________மாண்படையும்
பேசினால் கல்வி போல் செல்வமில்லை - அதனால்
பெற்றிடும் இன்பத்திற்கு ஓர் எல்லையில்லை

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பார்த்தனன் என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

______________________________

2. பின்வருவனவற்றைப் புணர்த்தி எழுதுக.

கல் + அறை :- ____________

மரம் + வேர் :- ____________

பொன் + குடம் :- ____________

3. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

பண்பாடு :- ______________________

வெற்றி :- ______________________

நூற்றாண்டு :- ______________________

4. பின்வரும் சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

**கரை**

பெயர் :- ______________________

வினை :- ______________________

5. கீழ்வரும் உவமை அணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

**முத்துப்பல்**

உவமானம் :- ____________

உவமேயம் :- ____________

பொதுத்தன்மை :- ____________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நாங்கள் ஒரு செயலில் தோல்வி அடைந்து விட்டால் அத்தோல்வியை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. தோல்வி என்பது வெற்றிக்கான முதற்படி எனக் கூறுவர். முதல் முறையிலே நாம் வெற்றி அடைய வேண்டும் என்று நினைப்பது நன்று தான். அவ்வாறு வெற்றி அடைந்தால் அது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், முதல் முறையிலேயே வெற்றி கிடைக்கவில்லை என்றால் சோர்ந்து போகக் கூடாது. தோல்விக்கான கரணியத்தைக் கண்டறிந்து மீண்டும் முயற்சிக்க வேண்டும்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✱ இலங்கையின் முதற்குடிகள்.
- ✱ மழையினால் ஏற்படும் நன்மை, தீமை.
- ✱ ஒலிம்பிக் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

புள்ளிகள் 20